இங்கே டிவிஷன் அமைப்பதை பற்றி பிரச்சினை இருப்பதாகச் சொன்னார்கள். ஏறத்தாழ மூன்று மாதத்திற்கு முன்பே மத்திய அரசை அணுகி, மத்திய அமைச்சர் அவர்களைப் பார்த்து அதை மதுரையோடு சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையை நாம் வைத்திருக்கிறோம். எனவே அந்த அடிப்படையிலே அது வேறுவிதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை விரிவாக விவாதிக்கின்ற சூழ்நிலை இப்போது இல்லை.

திரு. ஏ. சாகுல் ஹமீது: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை—கொல்லம் எக்ஸ்பிரஸ் வண்டியின் வேகத்தை கூட்டுவதற்கு மாநில அரசு ஒரு தீர்மானத்தைப் போட்டு மத்திய அரசை வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, வேகத்தைக் கூட்டுவதற்கு நாம் வேகமாக நடவடிக்கை எடுப்போம்.

கொடைக்கானல்—சென்னையிடையே சொகுசு பேருந்துப்பணி

*வினா எண்.768 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா:

(அ) கொடைக்கானல்—சென்னை (வழி) கொடைரோடு நெடுந்தூர சொகுசு பஸ் விடும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

(ஆ) ஆம் என்றால் எப்போது அமுல் நடத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, கொடைக்கானலுக்கு வெளிநாட்டுக்காரர்கள் அதிகமாக வருகிறார்கள். மலைக்குச் செல்வதற்கு மிகுந்த சிரமம் இருக்கிறது ஆகவே, இதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு ஒரு 35 நபர்கள் உட்காரக்கூடிய ஒரு சொகுசு பஸ் விடுவதற்கு அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுப்பார்களாக என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி தலைவர் அவர்களே, சொகுசு வண்டிகளிலே இப்போது இருப்பதே 35 இடங்கள் தான். ஆகவே, இன்னும் சிறிய வண்டியாக மாற்றினால் தான் மலைப் பகுதிகளில் இயக்க முடியும் அப்படி சிறிய வண்டியாக

மாற்றும் பொழுது 14 முதல் 20 நபர்கள் வரை அமரக்கூடிய சிறிய வண்டியாக இருக்கும். ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் சென்னையிலிருந்து கொடைக்கானல் வரை நாம் சொகுசு பேருந்தை இயக்குவதற்கு வாய்ப்பில்லை.

அதற்குக் காரணம், அந்த மலைப்பகுதி மிகவும் குறுகலான பகுதியாக இருக்கிறது. அதற்காக இங்கேயிருந்து குறைந்த நபர்களை ஏற்றிக் கொண்டு செல்வது என்பது அவ்வளவு நல்லதல்ல. எனவே, அந்தப் பகுதிக்கு மட்டும் இந்த விரைவுப் பேருந்து எங்கே போய் நிற்கிறதோ அந்தயிடத்திலேயிருந்து கொடைக்கானலுக்குப் புதிய பேருந்துகளை, கூடுதல் பேருந்து களை விடுவதற்கு வேண்டுமானால் நடவடிக்கையெடுக்கலாம்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொடைக்கானல் மலையடிவாரத்தில் இருக் கின்ற வத்தலக்குண்டு என்ற இடத்திலிருந்து சொகுசுப் பேருந்து களை விட்டால் அங்கிருந்து கொடைக்கானலுக்குப் போவதற்கு வசதியாக இருக்கும். எனவே வத்தலக்குண்டுவிற்குச் சென்னை யிலிருந்து பஸ் விடமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவரவர் களே, இந்த யோசனை சிறந்த யோசனையாக இருக்கிறது அந்த அடிவாரத்திற்கு அருகில் இருக்கின்ற நகரத்திலிருந்து சொகுசுப் பேருந்தை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கே. உச்சி: பேரவைத் தலைவரவர்களே, கொடைக் கானல் உல்லாசப் பயணிகளைக் கவருகின்ற பகுதி என்று சொல்லப்படுகிறது. கொடைக்கானலை போன்று நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகையும் உல்லாசப் பயணிகள் அதிகமாக வருகின்ற இடமாக இருக்கிறது. எனவே, கோவையிலிருந்து உதகைக்கு உல்லாசப் பஸ் விடுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலிருந்து உதகைக்கு நிறையப் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. வேண்டுமானால் மாண்புமிகு உறுப் பினரவர்கள் அதை உல்லாசப் பயணப் பேருந்து என்று நினைத்துக்கொண்டு அதில் போகலாம். உல்லாசப் பேருந்து என்று எங்கேயும் விடப்படவில்லை.

1931 ஏப்ரல் 16]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள், கொடைக்கானலுக்கு பஸ் விட வேண்டுமென்றால் இங்கிருந்து அதிகப்பேர் ஏற மாட்டார்கள் என்று. திண்டுக்கல் முதலிய இடங்களிலிருந்து செல்ல வேண்டுமென்றாலும் முதல் பஸ், இரண்டாவது பஸ், மூன்றாவது பஸ் என்று நின்றாலும் இடமிருப்பது இல்லை. எம். எல். ஏ.க்கள் காத்திருக்கின்ற நிலைமை இருக்கிறது. தனியார் பஸ், பி. ஆர். சி. பெரிய பஸ்கள் மலையிலே சென்று வருகின்றன. கொடைக்கானலுக்கு விடுவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்று சொன்னாலும்கூட, கொடை ரோடு வழியாக வத்தலக்குண்டு வரையிலுமாவது சொகுசு பஸ் விடுவதற்கான ஏற்பாட்டைச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லும்பொழுது, இங்கேயிருந்து யாரும் ஏறமாட்டார்கள் என்று சொல்லவில்லை. சொகுசுப் பேருந்து என்பது சிறிய பேருந்தாக இருக்கும்; அப்பொழு தான் மலையின் மேலே இயக்குவதற்கு வசதியாக இருக்கும். அப்படிப் பட்ட சிறிய பேருந்துகளிலே 20 சீட்டுகள் வரையில்தான் இருக்கும். அதை வைத்துக்கொண்டு இங்கேயிருந்து போவது என்பது முறையாக இருக்காது என்பதால் பக்கத்தில் இருக்கின்ற, அடிவாரத்திலே இருக்கின்ற ஒரு நகரத்திற்கு இயக்கி, அங்கே யிருந்து வேறு பேருந்தை இயக்கலாம் என்று நான் ஏற்கனவே சொன்னேன்.

குளத்தூர் தொகுதியில் குழந்தைகள் காப்பகம் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 769. திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதியிலிருந்து குழந்தைகள் காப்பகம் அமைப்பது சம்பந்தமாக மாவட்ட சமூக நல அலுவலரிடமிருந்து திட்டம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த கிராமங்களில் காப்பகங்கள் அமைக்கப்படும்?

(இ) பேராம்பூர் கிராமம் சேர்த்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) இல்லை.

மற்றும் (இ)

(ஆ) கேள்விக் இடமில்லை.